**13.04.2023.**

**O.S. No.54/2017**

**PW.2 Rajasekar**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றார்.**

**<u>எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு சொந்த சொந்த ஊர் கிருஷ்ணகிரியே ஆகும். வாதி சண்முகம் மாட்லம்பட்டி என்ற ஊரை சார்ந்தவர் ஆவார். எதிர்வாதிகளை எனக்கு தெரியும். அவர்கள் கிருஷ்ணகிரி அணை பகுதியில் சோக்காடி என்ற ஊரில் வசித்து வருகிறார்கள். வழக்கு சொத்து சோக்காடியில் உள்ளது. அதன் பரப்பளவு 2 ஏக்கர் மற்றும் சில்லரை ஆகும். வழக்கு சொத்து விவசாய நிலம் அல்ல. அவை தரிசு நிலமாகும். வழக்கு சொத்தை குறித்த வியாபாரம் எங்கு நடந்தது என்றால், சோக்காடியில் எதிர்வாதிகளின் வீட்டில்தான் நடந்தது. அப்போது நானும், சண்முகமும், எதிர்வாதிகளும் மற்றும் ஒரு முஸ்லீம் நபரும் இருந்தார்கள். அவரை நாங்கள் ஜப்பான் என்று அழைப்போம். அவர் பெயர் நசீர் ஆகும். 07.03.2014 அன்றுதான் வழக்கு சொத்து குறித்து வியாபாரம் பேசினோம். அன்றையதினம் எவ்வளவு பணம் கட்டினார்கள் என்றால், ரூ.17,00,000/- கட்டினார். வாதி ரொக்கமாக ரூ.17,00,000/- செந்தில்குமாரின் அப்பாவிடம் கொடுத்தார். அந்த தொகை 500 ரூபாய் நோட்டுக்களாகவும், 100 ரூபாய் நோட்டுக்களாகவும், 200 ரூபாய் நோட்டுக்களாகவும், 2000 ரூபாய் நோட்டுக்களாகவும் கொடுத்தார். 500 ரூபாய் நோட்டுக்களாக ரூ.5,00,000/- இருக்குமா என்றால், இருக்கும். ரூ.2000 ரூபாய் நோட்டுக்களாக ரூ.3,00,000/- கொடுத்தார். மீதி பணம் ரூ.100 ரூபாய் நோட்டுக்களாகவும், ரூ.200 ரூபாய் நோட்டுக்களாகவும் வாதி கொடுத்தார்.

வழக்கு வியாபாரத்திற்கு முன்பு 10 வருட காலமாக வாதி சண்முகம் எனக்கு பழக்கமான நபர் ஆவார். நான் சொல்வதெல்லாம் பொய் என்றாலும், நான் சொல்வதுபோல் எதிர்வாதிகள் வீட்டில் வியாபாரம் பேசவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் ரூ.500, 200, 2000 ரூபாய் நோட்டுக்களாக வாதி 1ஆம்

எதிர்வாதியிடம் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. ஏற்கனவே எதிர்வாதிகள் வாதிகளிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக எழுதி கொடுத்த கிரய ஒப்பந்தம் என்றால், சரியல்ல. சொத்திற்காகதான் வாதி எதிர்வாதியிடம் பணம் கொடுத்தார்.

நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. 2016ஆம் வருடம் நவம்பர் மாதம் 8ஆம் தேதியன்றுதான் பண மதிப்பிழப்பு அறிமுகப்படுத்தப்பட்டது என்றாலும், அதன்பிறகுதான் ரூ.2000 நோட்டுக்கள் புழக்கத்தில் வந்தது என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

R SAKTHIVEL
Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**<u>OS No. 54/2017</u>**

**PW.3** is solemnly affirmed on **13.04.2023** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | நசீர் | Father / Husband Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வழக்கில் 3ஆம் தரப்பினர் ஆவேன். நான் வாதி தரப்பில், வாதி சாட்சி 3 ஆக விசாரித்து கொள்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**<u>எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

Ex.A2 கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால், சரிதான். எனவே, Ex.A2 கிரய ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்றால், சரியல்ல. நான் வியாபாரம் பேசும்போதும், பணம் கொடுக்கும்போதும் உடனிருந்தேன். எங்கு வைத்து வியாபாரம் பேசப்பட்டது என்றால், சோக்காடியில் வைத்து பேசப்பட்டது. எவ்வளவு தொகை பணம் கட்டியதாக சொல்கிறேன் என்றால், ரூ.17,00,000/- வாதி எதிர்வாதியிடம் கொடுத்தார். ரூ.17,00,000/- ல் ரூ.2000 ரூபாய் நோட்டுக்கள் எவ்வளவு, ரூ.500 ரூபாய் நோட்டுக்கள் எவ்வளவு என்றால், ரூ.17,00,000/- மும் ரூ.500 ரூபாய்

நோட்டுக்களாகவேதான் வாதி எதிர்வாதியிடம் கொடுத்தார். அந்த பணத்தை நான்தான் அப்போது வைத்திருந்தேன். வழக்கிற்காக வாதி சண்முகம் கேட்டுக் கொண்டதற்காக எனக்கு தெரியாத விஷயத்தை தெரிந்ததுபோல் பொய் சொல்கிறேன் என்றால், தவறாகும்.

**நீதிமன்ற கேள்வி :** Ex.A2 கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சியாகவோ அல்லது சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அடையாள சாட்சியாக கையெழுத்து செய்திருக்கிறேனா?

**பதில்:** Ex.A2 கிரய ஒப்பந்தத்தில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை.

( இந்நிலையில் சாட்சி Ex.A2 ஆவணத்தை அடையாள சாட்சியாக கையெழுத்திட்டுள்ளார் என்றும், தற்போது அதற்கு மாறாக Ex.A2 ஆவணத்தில் தான் கையெழுத்து செய்யவில்லை என கூறுகிறார் எனவும், எனவே சாட்சியியல் சட்டபிரிவு 154ன் படி சாட்சியை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோருகிறார். அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை)

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

Ex.A2 ஆவணத்தில் மூன்றாம் பக்கத்தில் அடையாள சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றால், சரிதான்.

**<u>எதிர்வாதிகள் தரப்பில் மேலும் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

R SAKTHIVEL

Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri